8ஆம் வகுப்பு -கணக்கு-வாழ்வியல் கணிதம்-ஒரு மதிப்பெண் தேர்வு

ஆக்கம்: கோ.இளவரசு M.A.,M.Sc.,M.Phil.,B.Ed., B.T.Asst.,

1. 250 லிட்டரின் 12% என்பது 150 லிட்டரின் ________ இக்குச் சமமாகும்.
(அ) 10% (ஆ) 15% (இ) 20% (ஈ) 30%

2. ஒரு பள்ளித் தேர்தலில் A, B மற்றும் C ஆகிய மூன்று வேட்பாளர்கள் முறையே 153, 245 மற்றும் 102 வாக்குகளைப் பெற்றனர் எனில், வெற்றியாளர் பெற்ற வாக்குச் சதவீதம்___________ஆகும்.
(அ) 48% (ஆ) 49% (இ) 50% (ஈ) 45%

3. 10000 இன் 25% மதிப்பின் 15% என்பது ___________ஆகும்.
(அ) 375 (ஆ) 400 (இ) 425 (ஈ) 475

4. ஓர் எண்ணின் 60% இலிருந்து 60 ஐக் கழித்தால் 60 கிடைக்கும் எனில், அந்த எண்______ஆகும்.
(அ) 60 (ஆ) 100 (இ) 150 (ஈ) 200

5. 48 இன் 48% = $x$ இன் 64% எனில், $x$ இன் மதிப்பு ___________ ஆகும்.
(அ) 64 (ஆ) 56 (இ) 42 (ஈ) 36

6. ஒரு பழ வியாபாரி ₹200 இக்கு பழங்களை விற்று ₹40 ஐ இலாபமாகப் பெறுகிறார். அவரின் இலாபச் சதவீதம் ______ ஆகும்.
(அ) 20% (ஆ) 22% (இ) 25% (ஈ) $16\frac{2}{3}$%

7. பூச்சட்டி ஒன்றை ₹528 இக்கு விற்று ஒரு பெண் 20% இலாபம் பெறுகிறார். 25% இலாபம் பெற அவர் அதை என்ன விலைக்கு விற்க வேண்டும்?
(அ) ₹500 (ஆ) ₹550 (இ) ₹553 (ஈ) ₹573

8. ஒரு நபர் ஒரு பொருளை ₹150 இக்கு வாங்கி, அதன் அடக்க விலையின் 12% ஐ இதரச் செலவுகளாக செலவிடுகிறார். 5% இலாபம் பெற அவர் அதை என்ன விலைக்கு விற்க வேண்டும்?
(அ) ₹180 (ஆ) ₹168 (இ) ₹176.40 (ஈ) ₹88.20

9. 16% தள்ளுபடியில், ₹210 இக்கு வாங்கப்பட்ட ஒரு தொப்பியின் குறித்த விலை என்ன?
(அ) ₹243 (ஆ) ₹176 (இ) ₹230 (ஈ) ₹250

10. இரண்டு தொடர் தள்ளுபடிகளான 20% மற்றும் 25% ஆகியவற்றிக்கு நிகரான ஒரே தள்ளுபடி சதவீதம் ______ ஆகும்.
(அ) 40% (ஆ) 45% (இ) 5% (ஈ) 22.5%

11. ஓர் அசலின் மீதான வட்டி, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கணக்கிடப்பட்டால், ஓராண்டிற்கு ___________ மாற்றுக் காலங்கள் இருக்கும்.
(அ) 2 (ஆ) 4 (இ) 6 (ஈ) 12

12. 10% ஆண்டு வட்டியில், அரையாண்டுக்கொரு முறை வட்டிக் கணக்கிடப்பட்டால், ₹4400 ஆனது ₹4851 ஆக எடுத்து கொள்ளும் நேரம் ________ ஆகும்.
(அ) 6 மாதங்கள் (ஆ) 1 ஆண்டு (இ) $1\frac{1}{2}$ ஆண்டுகள் (ஈ) 2 ஆண்டுகள்

13. ஓர் இயந்திரத்தின் விலை ₹18000. அது ஆண்டுக்கு $16\frac{2}{3}$% வீதம் தேய்மானம் அடைகிறது.
2 ஆண்டுகளுக்குப் பிறகு, அதன் மதிப்பு _______ ஆக இருக்கும்.
(அ) ₹12000 (ஆ) ₹12500 (இ) ₹15000 (ஈ) ₹16500

14. 10% ஆண்டு வட்டியில், ஆண்டுக்கொரு முறை வட்டிக் கணக்கிடப்பட்டால், 3 ஆண்டுகளில் _______ என்ற அசலானது ₹2662 தொகையாக ஆகும்.
(அ) ₹2000 (ஆ) ₹1800 (இ) ₹1500 (ஈ) ₹2500

15. 2% ஆண்டு வட்டியில், 2 ஆண்டுகளுக்கு ஓர் அசலுக்குக் கிடைக்கும் கூட்டுவட்டிக்கும் தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் ₹1 எனில், அசல் ஆனது _______ ஆகும்.
(அ) ₹2000 (ஆ) ₹1500 (இ) ₹3000 (ஈ) ₹2500

LIVEWORKSHEETS